செய்தி வெளியீடு எண்: 38 நாள் : 14.01.2011

# தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளையொட்டி பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் – பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் 19 ஆயிரம் பணியாளர்களுக்கு 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகை!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழ்ப் புத்தாண்டு–பொங்கல் திருநாள் கொண்டாடப் படுவதையொட்டி பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் கடந்த 2010ஆம் ஆண்டில்,200 நாள்களுக்கு மேல் பணிபுரிந்துள்ள பணியாளர்களுக்கு தலா 1000 ரூபாய்;

151 நாள் முதல் 200 நாட்கள் வரை பணிபுரிந்துள்ள பணியாளர்களுக்கு தலா 400 ரூபாய்;

91 நாள் முதல் 150 நாட்கள் வரை பணிபுரிந்துள்ள பணியாளர்களுக்கு தலா 240 ரூபாய்;

90 நாட்களும் அதற்குக் குறைவாகப் பணிபுரிந்துள்ள பணியாளர்களுக்கு தலா 145 ரூபாய்

–வீதம் மொத்தம் 19 ஆயிரம் பணியாளர்களுக்கு 1 கோடியே 90 இலட்சம் ரூபாய்ச் செலவில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.